நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No. 25/2020**

2022-ம் ஆண்டு மே மாதம் 31-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 47 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜன் | வயது | 32 /2022 |
| தகப்பனார் பெயர் | சொக்கலிங்கம் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | தேவர்கண்டநல்லூர் | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது தேவர்கண்டநல்லூர், உச்சிமேட்டில் வசித்து வருகிறேன். தனியார் வங்கியில் வேலை செய்கிறேன். ஆஜர் 1வது எதிரியை தெரியும். 2 வது எதிரியை பார்த்ததில்லை. எனது சித்தப்பா அண்ணாதுரை மூலமாக 1வது எதிரி சக்திவேலை தெரியும். எனது சித்தப்பாவிடம் 1வது எதிரி 2018 ம் வருடத்தில் கோர்ட்டில் அலுவலக உதவியாளர் வேலை இருப்பதாகவும், அதனை வாங்குவதற்கு ரூ.2 லட்சம் தேவைப்படும் என்று சொல்லியுள்ளார். எனது சித்தப்பா எனது அப்பாவிடம் சொல்லி நான், எனது அப்பா மற்றும் சித்தப்பா ஆகியோர் 1வது எதிரியை அவரது வீட்டில் போய் பார்த்தபோது ரூ.1 லட்சம் பணம் அட்வான்ஸாக கொடுக்கவேண்டும் என்றும், 6 மாதத்திற்குள் வேலை வந்தவுடன் பாக்கி ரூ.1 லட்சம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதன்படி 1வது எதிரி வீட்டில் வைத்து ரூ.1 லட்சம் பணம் கொடுத்தோம். ஒரு வருடமாகியும், வேலை கிடைக்கவில்லை. எஸ்.பி. ஆபீஸில் கம்ளைண்ட் கொடுக்கலாம் என்று போனபோது ஏற்கனவே சதீஷ் என்பவர் கம்ளைண்ட் கொடுத்திருப்பதாக சொல்லி என்னை போலிசார் விசாரித்தார்கள். நடந்த விபரத்தை சொன்னேன். அதன் பின்னர் 83 நபர்களிடம் பணம் வாங்கி ஏமாற்றிய விபரம் தெரியவந்தது.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

நான் எஸ்.பி. ஆபீஸிற்கு எந்த தேதியில் புகார் கொடுக்க போனேன் என்று ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் எந்த தேதியில் 1வது எதிரியிடம் பணம் கொடுத்தேன் என குறிப்பிட்டு சொன்னேனா என்றால் தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் சொல்வதுபோல் 2018ம் வருடம் எதிரி சக்திவேலை பார்க்கவில்லை என்றும் அவரிடம் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் பணம் கொடுத்து ஏமாந்திருந்தால் தனிப்பட்ட புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் 1வது எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. ( 2 வது எதிரி தரப்பில்)** - இல்லை என தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.